உ

கந்தகோட்டம் சேவா சங்கத்தின்

# கந்தன் சேவா மலர்

பதிவு எண். 186/2020

மலர்-1 இதழ்-4 மாத இதழ் (தனிச் சுற்றுக்கு மட்டும்) ஜனவரி-2021





# இளம் சாதனையாளர்
# கட்டிட வடிவமைப்பு வல்லுநர்
# விக்னேஷ்வர்

நம் ஆயிர வைசிய பேரி செட்டியார் சமூக வீடுகளில் உள்ள கலை நயம் பற்றிய தன் ஆய்வுத் தொகுப்பு மூலம், தேசிய அளவில் மட்டுமின்றி உலக அளவில், நம் சமூகத்தை பிரபலம் அடைய செய்தவர் தான் திரு. V.S. விக்னேஷ்வர் என்ற கட்டிட வடிவமைப்பு வல்லுநர். இவர் தான் நமது இந்த மாத நம் சமூக இளம் சாதனையாளர்.

நம்மவர் திரு. V.S. சிவநேசன் B.E., திருமதி. சாந்தி M.A., தம்பதிகளின் மகனாவார். நம் கந்த கோட்டக் கோயிலின் சட்ட ஆலோசகராக பல ஆண்டுகளாக சேவை செய்து வந்த வழக்கறிஞர் திரு. P.K. சிவசுப்ரமணியம் (P.K.S), இவரது தாய் வழி பாட்டனார், இவருடைய தந்தை வழி பாட்டனார் திரு. V.A. சுந்தர் அவர்கள் ஹைதராபாத் பாரத் ஹேவி எலெக்ட்ரிக்ல்ஸ் (B.H.E.L.) நிறுவனத்தில் மிக உயரிய பதவியான பொது மேலாளராக (GM) பணியாற்றியவர் என்பதையும் இங்கு குறிப்பிடுவதில் பெருமைப்படுகிறேன்.

தற்பொழுது 34 வயதாகும் விக்னேஷ்வர், தனது படிப்பை சின்மியா மிஷன் பள்ளியில் தொடங்கி, அகமதாபாத் C.E.P.T பல்கலைகழகத்தில் கட்டிட வடிவமைப்பு இள நிலைப் பட்டம் பெற்று, முது கலைப் பட்டத்தை நெதர்லாந்து நாட்டின் T.U.Delft பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

இவர் சென்னை கிண்டியில் உள்ள அண்ணாப் பல்கலைகழகத்தில் உள்ள The School of Architecture and Planning, மற்றும் MEASI Academy of Architecture முதலிய கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

A Plus V (ARCHIITECTURE PLUS VALUE), என்ற நிறுவனத்தைத் தொடங்கி சிறப்பாக நடத்திவருகிறார். இதில் VALUE என்றால் விக்னேஷ்வர் என்று கூறும் அளவிற்கு இவருடைய நுட்பமான வடிவமைப்புத் திறனால்











வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பெற்றுள்ளார் என்றால் மிகையாகாது. ரேடியன்ஸ் (RADIANCE), ஜி. கே. ஷெட்டி பில்டர்ஸ், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி, SAN அகாடமி பள்ளிகள், CHENNAI ONE IT PARK, FIRM FOUNDATION போன்ற நமது நாட்டின் பெரிய நிறுவனங்கள் இவருடைய திறமை மீது பற்று வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள்; உரிய ஊக்கம் அளித்து இவர் உச்சத்தைத் தொட உத்வேகம் அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவருடைய துணைவியார் திருமதி. ஸ்வாதி விக்னேஷ்வர், இன்ஜினீயர் படித்த, உள்அரங்கு வடிவமைப்பு நிபுணர் ஆவார். இவரின் பங்களிப்பும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது மேலும் சிறப்பு. சுவருக்கு ஏற்ற வர்ணமாக இவர்கள் இருவரும் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். எண்ணங்கள் அழகானால் வாழ்க்கை அழகாகும் என்பது போல வடிவமைப்புகள் அழகாகவும், நல்ல ஸ்திரத் தன்மையுடனும், கலை நயத்துடன் அமைகின்றன. "நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப இவருடைய குடும்பம் அமைந்துள்ளது எனக் கூறுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

விக்னேஷ்வரின் "BERI CHETTIAR HOUSE" என்ற பேரி செட்டியார் இல்லங்களின் கட்டிட வடிவமைப்பு மற்றும் அதன் கலை நயத்தை விளக்கிய ஆய்வுத் தொகுப்பு நம் நாட்டின் கட்டிட வடிவமைப்புக்கான உயரிய விருதான "IIA National Award for Excelence in Architecture" 2016ஆம் ஆண்டு வென்றதோடு நிற்காமல், தன் தொகுப்பை ஐரோப்பா கண்டத்தில் பல நாடுகளிலும், தென்





A'DESIGN AWARD
WINNER 2020
SILVER

Firm Hall by **Architecture plus Value**
https://competition.adesignaward.com/design.php?ID=100253




அமெரிக்கா நாடான மெக்ஸிகோ (MEXICO) நாட்டில் நடைபெற்ற "SAHC" மாநாட்டில் இவர் இதனை விளக்கிப் பேசி நம் பேரி செட்டியார் சமூக பெருமையை உலகறிய செய்துள்ளார். இதுமட்டுமல்லாது இவருடைய நிறுவனமான "APlus V" பெங்களூரு நகரில் ரெடியன்ஸ் குழுமத்துக்காக வடிவமைத்த வில்லா குடியிருப்பு, இத்தாலி நாட்டின் A'Design வெண்கல விருதையும், சென்னை அண்ணா நகரில் FIRM HALL கட்டிட வடிவமைப்பு, இத்தாலி நாட்டின் A'Design வெள்ளி விருதையும், இராஜலட்சுமி பொறியியல் கல்லூரியில் வடிவமைத்த கட்டிடத்திற்காக, FOAID AWARD for sustainable design என்ற விருதையும் பெற்றுள்ளன. இனி வரும் காலங்களில் இவர் மேலும் பல விருதுகளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகிறேன்.

**திரு. V.S. விக்னேஷவர் அவர்களின் நிறுவனத்தைப் பற்றி மேலும் அறிய இங்கு கிளிக் (click) செய்யவும்**
**https://aplusv.in/**

தொகுப்பு :
**திரு. S. ராம்குமார்**
சென்னை



Work Shop : 044 - 25355279

**PEEYENCEE INDUSTRIES**

*Iron & Steel Fabricators & Contractors*

No. 196, Wall Tax Road, Park Town,
Chennai - 600 003.

No. 399 A, SIDCO Industrial Estate, Ambattur,
North Phase, Chennai - 600 098.
Email : peeyencee@yahoo.co.in